

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம்.    www.thennadu.org

மேழ விழுக்கம் ஊழி ஆண்டு 2300 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 09 ஆம் நாள் (26-09-2026 சனிக்கிழமை) நிறைமதி வெளியீடு + 94 21 222 9722



நல்லூரான் தேர்த் திருவிழா - ஆவணி 23ஆம் நாள் (09-09-2026)

படம் : [illegible]

# நல்லை ஆதீனத்திற்கு வருகை தந்திருந்த தருமையாதீனத் தம்பிரான் சுவாமிகள் தென்னாட்டில் எழுந்தருளல் (27-08-2028)
















**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன் - தலைமை ஆசிரியர்,**
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org



# தென்னாடு உழவாரப் படை

**"என் கடன் பணி செய்து கிடப்பதே"** என்ற தொண்டு நெறியின் வழிநின்று தென்னாடு உழவாரப்படையினுடாக தென்னாடு சிவமடத்தில் மட்டுமல்லாது இயலுமான திருக்கோயில்களில், **நிலை பெறுமாறு எண்ணுதியேல், நெஞ்சே நீ வா, நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு, புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கும் இட்டு, பூமாலை புனைந்து ஏத்தி புகழ்ந்து பாடி** என்ற அப்பர் பெருமானின் வேண்டுகோளுக்கு இணங்க திருக்கோயில்களைத் தூய்மையாக வைத்திருத்தல், திருக்கோயில் விளக்குகளைச் சுத்தம் செய்தல், பூசைக்காக மலர்கள் பறித்துக் கொடுத்தல், மாலை கட்டுதல், திருக்கோயில் பூம்பொழில் மற்றும் ஆநிரைப் பணிகள் செய்தல் போன்ற திருக்கோயில் தொண்டுகளை முன்னெடுத்தற் பொருட்டு ஆடி 13 ஆம் நாள் (29-07-2026) தென்னாடு உழவாரப் படை தென்னாடு சிவமடத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதலாவது திருப்பணியாக மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. தொடர்ந்து, திங்கள் ஒருகோயில் என்ற அடிப்படையில், ஒவ்வொரு திங்களும் ஒரு நாள் இந்த உழவரப்பணியை முன்னெடுத்து வருகிறோம். இதில் தென்னாடு மடத்தினை சார்ந்த அடியார்களுடன், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சைவ சித்தாந்தத்துறை மாணவர்களும் மற்றும் விரிவுரையாளர்களும் சேர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். இதில் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் ஆலய நிர்வாகத்தினர் குறிப்பாக தலைவர் தம்பிராஜா தர்பாகரன் அவர்களும் ஆர்வமாக ஊக்குவித்தது வருகிறார்கள்.

உழவாரப்பணி என்பது ஒரு இறைபணி. அத்துடன் திருக்கோயிலை சுத்தமாக வைத்திருத்தல் என்பது மிகவும் இன்றியமையாதது. அதற்கு அடியார்கள் தாமாக முன்வந்து உதவவேண்டும்.

அப்பர் பெருமான் சமண மடத்தில் இருந்து மீண்டும் சைவம் திரும்பிய பின், தேவாரப் பதிகங்களைப் பாடியதோடு மட்டுமல்லாமல், அக்காலத்தில் பராமரிப்பின்றி புதர் மண்டிக் கிடந்த சிவாலயங்களைத் தேடிச்சென்று, அவற்றைச் சுத்தம் செய்யும் பணியிலும் ஈடுபட்டார். இதை அவர் இறைவன் மீதான அன்பின் வெளிப்பாடாகவும், முத்திக்கான நெறிகளில் ஒன்றாகவும் கருதினார். நால்வர் காட்டிய வழிகளில் இந்த தொண்டுநெறி மிகவும் முக்கியமானது. அப்பர் பெருமானின் இந்த வழிக்கு வருவதற்கு வித்திட்டவர் திலகவதியார் அம்மையார் என்பதை நாங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்.

**நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்**
**தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்**
**தன் கடன் அடியேனையும் தாங்குதல்**
**என் கடன் பணி செய்து கிடப்பதே.**

என்ற அப்பர் பெருமானின் வரிகளுக்கு அமையை இந்தத் தொண்டுநெறியில் நாமும் ஈடுபட்டு, எம் குழந்தைகள், மாணவர்கள் மற்றும் அடியவர்களையும் ஈடுபடுத்தி திருக்கோயில் திருப்பணிகளில் பங்குகொள்வதன் மூலம் திருக்கோயில்களை சுத்தமாக வைத்திருப்பது மட்டுமல்ல, கோயில்களின் அன்றாட இயங்குநிலைக்கு உதவியாய் இருந்து இறைவனின் திருவருளை பெற்றுய்வோம்.

உங்கள் திருக்கோயிற்கும் உழவாரப்பணி தேவையெனில் தென்னாடு உழவரப்படையைத் தொடர்பு கொள்ளுங்கள்.

+94 70 770 1111

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(27-08-2026) – நல்லூர் பெருந்திருவிழாவை சிறப்பித்திட, நல்லை ஆதீனத்தில் எழுந்தருளியிருக்கும் தருமபுரம் ஆதீனம் திருநெல்வேலி தெண்மண்டல கட்டளைத் தம்பிரான் சீர்வளர்சீர் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தென்னாட்டில் எழுந்தருளி ஐம்பூதநாதர் சன்னிதியில் வழிபாடாற்றி, தென்னாடு கோசாலை, மயில்வளாகம், நூலகம், திருமுறை சன்னிதி என்பவற்றைப் பார்வையிட்டு, நிறைமதி வழிபாடு மற்றும் இதழ் வெளியீட்டிலும் கலந்து கொண்டு அருளாசிகளை வழங்கியருளினார்.

(27-08-2026) – திருமதி. மகேஸ்வரி சிவநாதன் அவர்களின் உறவினர் திருமண நிகழ்வை முன்னிட்டு மதியநேர சிறப்பு வழிபாடுகளும் அடியார்களுக்கான அமுதுசெய்வித்தலும் இடம்பெற்றன. (27-08-2026) – தென்னாட்டின் எழுபத்து மூன்றாவது திங்கள் இதழ் வெளியீடு, கடந்த மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் நிறைமதி அன்று ஆவணி நிறைமதி நன்னாளில் சிறப்பாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில், நல்லூர் பெருந்திருவிழாவை சிறப்பித்திட, நல்லை ஆதீனத்தில் எழுந்தருளியிருக்கும் தருமபுரம் ஆதீனம் திருநெல்வேலி தெண்மண்டல கட்டளைத் தம்பிரான் சீர்வளர்சீர் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள், நல்லூர் அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயில் முதன்மை அருச்சுனைஞர் கலாநிதி, செம்மொழி பிதாமகர் இராச சீர் சிவ கமல்ராஜ் குருக்கள் அவர்கள், தென்னாடு முதல்வரின் தங்கையார் திருமதி. தர்சிகா தயாகரன், திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய இலங்கை ஒருங்கிணைப்பாளர் சைவப்புலவர் இரா. ஜீவன்பிரசான் மற்றும் சைவ மாணவர் சபையினருடன் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

நிகழ்வில், தருமபுரம் ஆதீனம் திருநெல்வேலி தெண்மண்டல கட்டளைத் தம்பிரான் சீர்வளர்சீர் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், தென்னாடு முதல்வரின் தங்கையார் திருமதி. தர்சிகா தயாகரன் அவர்களுக்கு முதல் இதழை வழங்கி, தென்னாட்டின் எழுபத்து மூன்றாவது திங்கள் இதழை வெளியிட்டு வைத்தார்

தொடர்ந்து, அடியார்களுக்கு அமுது செய்வித்தலுடன் நிகழ்வு நிறைவடைந்தது. (29-08-2026) – அமரர். நாகநாதர் சிதம்பரப்பிள்ளை தேவேந்திரம்பிள்ளை அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (30-08-2026) – அமரர் இரத்தினபூபதி தேவேந்திரம்பிள்ளை அவர்களின் ஆண்டுத்திதி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (06-09-2026) – 'தென்னாடு உழவாரப்படையினர்' தங்களது மூன்றாவது திங்கள் உழவாரப் பணியினை மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயிலில் மிகச் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர். கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் வழிகாட்டலில் இயங்கும் இவ் உழவாரப் படையில் 25 அடியார்கள் பங்கேற்று, திருக்கோயிலின் உள்வீதி, வெளிவீதிகள் மற்றும் உள்மண்டபங்களை மிகத் தூய்மையாக உழவாரம் செய்தனர்.

(09-09-2026) – ஆவணித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (14-09-2026) – ஆவணிச் சதுர்த்தி வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (24-09-2026) – தமிழக சைவ ஆதீனங்களில் ஒன்றான தென்சேரிமலை ஆதீன குருமகாசந்நிதானம் தவத்திரு முத்துசிவராமசாமி அடிகளார் அவர்கள் 48 அடியார் பெருமக்களுடன் வருகை தந்து ஐம்பூதநாதர் சன்னிதியில் வழிபாடாற்றி, தென்னாடு கோசாலை, மயில்வளாகம், நூலகம், திருமுறை சன்னிதி என்பவற்றைப் பார்வையிட்டனர். அன்றையநாளில் அடியார் பெருமக்களுக்கு அமுது செய்வித்தலும் இடப்பெற்றது. (24-09-2026) – புரட்டாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# சிவ ஆசிரியர் தகைமை பெற்றார் உயிரொளிசிவம் தென்னரசு



**என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.**

யாழ்ப்பாணம் கோண்டாவிலிருந்து அயர்லாந்து சென்று, திருவருட்பயனால் அயர்லாந்துத் தீவின் மத்தியில் அமைந்திருக்கும் அத்தலோன் மாநகரத்தில் தமிழ் கடவுளாகிய முருகனுக்கு திருக்கோயிலை நிறுவி, திருக்கோயில் அறங்காவலராகவும் திருக்கோயிலின் தலைமை அருச்சுனைஞராகவும் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் வழிப்படுத்தலில் செந்தமிழ் வழிபாடுகளை ஆற்றிவரும் **சிவத்திரு. சோமசூரியசிங்கம் காண்டீபன்** அவர்களுக்கு, அருட்டோற்றம் ஆண்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 மடங்கல் நல்லோரை ஆவணித் திங்கள் 10 ஆம் நாள் நிறைமதி அன்று (27-08-2026 வியாழக்கிழமை), கிளிநொச்சி உருத்திரபுரத்தில் சோழர்காலத்தில் கட்டப்பட்ட உருத்திரபுரீசுவரர் திருக்கோயிலில் மூன்று தலைமுறையாக தெய்வத்தமிழில் வழிபாடுகள் ஆற்றி வரும், பிரதிஷ்டா கிரியாமணி, கிரியாவித்தகர், கிரியாதிலகம் சிவஸ்ரீ கிரீட உருத்திரபுரேஸ்வரக் குருக்கள் அவர்களால், சிவ ஆசிரிய திருமஞ்சனம் (ஆச்சாரியர் அபிசேகம்) செந்தமிழ் மந்திரங்கள் ஓதி, தென்னாடு சிவமடத்தில் வைத்து வழங்கப்பட்டு **“சிவ ஆசிரியர் உயிரொளிசிவம்”** என்னும் திருப்பெயர் வழங்கப்பெற்றது.

இச்சிவ ஆசிரிய திருமஞ்சனம் பெற்ற இவர் வாழ்வியல் சடங்குகள், திருக்குட நன்னீராட்டுச் சடங்குகள் மற்றும் பெருந்திருவிழாக்கள் ஆற்றுவதற்கும், மேலும் நுண்மை (சமயம்), நோன்மை (விசேடம்), சிவ ஆசிரியர் தீக்கைகள் வழங்குவதற்கான தகைமை உடையவர் ஆகின்றார்.

இந்நிகழ்வில் ஆனைக்கோட்டை கரைபிரான் ஆதி விநாயகர் திருக்கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ சிவகுமாரக் குருக்கள், நல்லூர் அருள்மிகு வீரமாகாளி அம்மன் திருக்கோயில் பிரதமகுரு கலாநிதி, செம்மொழி பிதாமகர் இராஜ ஸ்ரீ சிவ கமல்ராஜ் குருக்கள், தென்னாடு முதன்மை அருச்சுனைஞர் சிவத்திரு உயிரொளிசிவம் பிரதாபனார் அவர்கள் ஆகியோர்களும் இணைந்து திருக்குடத் திருமஞ்சனம் செய்து வைத்தனர்.

மேலும், நீர்வேலி செல்லக்கதிர்காம சுவாமி திருக்கோயில் பிரதமகுரு சிவத்திரு. தி. மயூரகிரிக் குருக்கள் அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்தியதுடன், நூல் ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கினார். மற்றும் பெரும் ஆளுமையாளராக வாழ்ந்து பலரை ஆற்றுப்படுத்திய ஸ்ரீ மஹாதேவ வாத்யாரின் மகனும் சிவாகமத்தில் ஆளுமை பெற்றவருமான சிவஸ்ரீ ஸ்ரீவத்சாங்க குருக்கள் அவர்களும் கலந்துகொண்டு வாழ்த்தியதுடன் கண்டிகையையும் நினைவு அன்பளிப்பாக வழங்கி, புலம்பெயர் தேசங்களில் எமது சைவ சமயப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் கூடுமானவரை அனைத்து சைவ மக்களுக்கும் தீக்கை வழங்கி சிவபூசை செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்று தனது பணிவான வேண்டுகோளாக முன்வைத்தார்.

மற்றும் அருள்மிகு சந்திரசேகரப் பிள்ளையார் திருக்கோயில் ஆதீனகர்த்தாவும் பிரதமகுருவுமாகிய “சிவகாம கிரியா ஞான வித்தகர்”, “ வேத விற்பன்னர்” சிவஸ்ரீ சாமி ஸ்ரீஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களும் வாழ்த்தியதுடன் கண்டிகையையும் நினைவு பரிசாக வழங்கினார். மேலும் அகில இலங்கை இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் சிவாகம கலாநிதி சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள் அவர்களும் தமது வாழ்த்துக்களை தெரிவித்தருளினார்.

சைவத்தினையும், தமிழினையும் சென்ற இடமெல்லாம் சிறப்புறச் செய்யும் தமிழர் மரபு தொன்றுதொட்டு தமிழரின் உயரிய பண்பாக இருந்து வருகிறது. அதற்கேற்ப தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் வழி நின்று, சைவத்தமிழ் பண்பாட்டினை வளர்க்கும் பணியில் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வரும் **சிவ ஆசிரியர் உயிரொளிசிவம் தென்னரசு காண்டீபன்** அவர்களை வாழ்த்தி, அவரது சிவத்தொண்டுகள் மென்மேலும் சிறப்புறவும், செந்தமிழ் சைவநெறியும், ஆகம மரபும் உலகெங்கும் செழித்தோங்கவும் திருவருளும் குருவருளும் துணைநிற்க எல்லாம் வல்ல கொக்குவில் தென்னாடு அருள்மிகு மனோன்மணி அம்மன் உடனுறை அருள்மிகு ஜம்புதநாதப் பெருமான் அருள்புரிய வேண்டி விண்ணப்பம் வைக்கின்றோம்.

**குறிப்பு: பெயர்கள் மற்றும் பட்டங்களில் வரும் பிறமொழிச் சொற்களை அவ்வாறே விடுகின்றோம்.**

**திருச்சிற்றம்பலம்**

# சிவ ஆசிரியர் தகைமை பெற்றார் உயிரொளிசிவம் தென்னரசு













# திருக்கோணேச்சரம் அருள்மிகு மாதுமையாள் உடனுறை கோணேச்சரப் பெருமான் திருக்கோயில் இளங்கோயில் திருக்குட நன்னீராட்டு



கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலையில் எழுந்தருளியுள்ள அருள்மிகு மாதுமையாள் உடனுறை திருக்கோணேச்சரப் பெருமான் திருக்கோயிலில், திருப்பணிகளை முன்னிட்டுப் இளங்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா (பாலஸ்தாபன கும்பாபிசேகம்) மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளது. **"தாயினு நல்ல தலைவரென்றடியார் தம்மடி போற்றிசைப்பார்கள்"** என்று திருஞானசம்பந்தப் பெருமானால் தேவாரப் பதிகம் பாடிப் போற்றப்பெற்ற இத்திருத்தலத்தில், இறைவன் திருவருள் கூடிவரும் வண்ணமும் அடியார்கள் திருவருள் பெற்று உய்யும் பொருட்டும் இத்திருநிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

கடந்த ஆவணித் திங்கள் 30 ஆம் நாள் (16-09-2026) புதன்கிழமை அதிகாலை 05.30 மணியளவில் ஆனைமுகன் வழிபாட்டுடன் தொடக்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடக்க வழிபாடுகள் நிறைவுற்றதைத் தொடர்ந்து, மாலை 03.30 மணியளவில் நிலமகள் வழிபாடு, காப்புக்கட்டுதல், குடங்கள் அமைத்தல், வேள்விச்சாலை புகுதல், தீக்கடவுள் வழிபாடு, முழுநிறை ஆகுதி ஆகியன இடம்பெற்றன. தொடர்ந்து திருமுறை விண்ணப்பமும், மறை ஓதல்களும் இடம்பெற்று அடியார்களுக்குத் திருநீறு வழங்கப்பெற்றன.

மறுநாள், ஆவணித் திங்கள் 31ஆம் நாள் (17-09-2026) வியாழக்கிழமை அனுச விண்மீனும் ஆறாம் பிறைத் திதியும் கூடிய சித்த ஓக நன்னாளில், காலை 08.07 மணி முதல் 10.07 மணி வரையுள்ள நல்வேளையில் அருள்மிகு மாதுமையாள் உடனுறை கோணேச்சரப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இளங்கோயில் திருக்குட நன்னீராட்டு பெருவிழா நிறைவுற்றது. அதிகாலையில் வேள்விச்சாலை வழிபாடுகள், முழுநிறை ஆகுதிகள் நிறைவுற்று, திருக்குடங்கள் திருவுலா வந்தடைந்து, புனித நீர் தெளிக்கப்பட்டு இளங்கோயில் நன்னீராட்டு இனிதே நிறைவேறியது.

இதனைத் தொடர்ந்து பெருங்கோயிலின் பெருங்குட நன்னீராட்டுப் பெருவிழாவினை வருகின்ற 2027 ஆம் ஆண்டு தைத் திங்கள் 16 ஆம் நாள் (29-01-2027) வெள்ளிக்கிழமை சுவாதி விண்மீன் நன்னாளில் நடத்துவதற்குத் திருக்கோயில் நிர்வாக சபையினரால் திருவருள் துணையுடன் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான திருப்பணி வேலைகளை முழுமையாக நிறைவேற்ற வேண்டியுள்ளதால், உலகெங்கும் வாழும் சைவப்பெருமக்கள் அனைவரும் பொருளுதவியும் நிதியுதவியும் வழங்கி இத்திருப்பணியில் பங்கேற்று, கோணேச்சரப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்யுமாறு வேண்டப்படுகிறார்கள்.

**திருகோணமலை கோணேஸ்வர ஆலய திருப்பணி நிதி**
**கணக்கு இலக்கம்:** 97047759
**இலங்கை வங்கி.**

**கிளை இலக்கம்: 006**
**வங்கி இலக்கம்: 7010**
SWIFT CODE: BCEYLKLX

**திருச்சிற்றம்பலம்**

# திருக்கோணேச்சரப் பாலாலயத் திருக்குட நன்னீராட்டு (17-09-2026)













# சைவமாணவர் சபையின் வேண்டுகோளுக்கு இணங்க நல்லூர் தேர்த்திருவிழாவை முன்னிட்டு விடுமுறை வழங்கிய ஆளுநர்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி திருக் கோயிலின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு, யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் கல்விக் கோட்டங்களுக்குட்பட்ட பாடசாலை களுக்கு 09-09-2026 புதன்கிழமையன்று சிறப்பு விடுமுறை வழங்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தியிருந்தமை போற்றுதலுக்குரியதாகும். வழமையாக நல்லூர் திருக்கோயிலின் தேர்த்திருவிழா காலம் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை விடுமுறைக்காலமாக அமையும். எனினும், இவ்வருடம் தவணை விடுமுறை முடிவடைந்து 07-09-2026 அன்றே பாடசாலைகள் மீளத் திறக்கப்படவிருந்த நிலையைக் கருத்திற் கொண்டு இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு அடையாளமாகத் திகழும் நல்லூரானின் தேர்த்திருவிழாவில் மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பங்கேற்பதற்கும், அந்நாளில் ஏற்படும் போக்குவரத்து நெரிசல்களைத் தவிர்ப்பதற்கும் ஏதுவாக யாழ் மற்றும் வலிகாம வலயப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குமாறு கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் **'சைவ மாணவர் சபை'** சார்பில் ஆளு நருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இக்கோரிக்கையினை ஆவண செய்த ஆளு நர், யாழ்ப்பாணம் மற் றும் நல்லூர் கல்விக் கோட்டங்களுக்குட் பட்ட பொருத்தமான பாடசாலைகளுக்கு 09-09-2026 அன்று விடுமுறை வழங்க ஆணை பிறப்பித்திருந்தார். அத்துடன், இவ்விடுமுறையினால் ஏற்படும் கற்றல் இழப்புகளை ஈடுசெய்யும் வகையில் பிறிதொரு நாளில் பதில் பாடசாலை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யுமாறும் கூறியிருந்தார்.




எங்கள் சைவ மாணவர் சபை வேண்டுகோளை கருத்தில் கொண்டு, நல்லூரானின் தேர்த்திருவிழாவில் மாணவர்களும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பங்கேற்பதற்கு வழிவகை செய்த கௌரவ ஆளுநர் அவர்களுக்கு நன்றிகளையும் தெரிவித்து மகிழ்கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

# சைவக் குருமார்களுடன் கௌரவ சனாதிபதி அவர்கள் சந்திப்பு



இலங்கை நாட்டின் கௌரவ சனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அவர்களுக்கும் சைவக் குருமார்களுக்கு மிடையிலான உயர்மட்டச் சந்திப்பொன்று 10-09-2026 அன்று கொழும்பில் நடைபெற்றது. வடகிழக்கைத் தலைமையகமாகக் கொண்ட சைவ சித்தாந்த மெய்யியலைப் போற்றும் சைவ சமய உயர் பீடத்தின் சார்பில், திருகோணமலை தென்கயிலை ஆதீன குரு மகாசந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளாரின் அருளாணையுடன் சைவசமயக் குரு அகோரசிவம் உமையரசு சிவாச்சாரியார் கலந்துகொண்டார். வடகிழக்குச் சைவ உயர் கட்டமைப்பு சார்பில் ஒருவர் அரச உயர்மட்டச் சந்திப்பில் பங்கேற்றது இதுவே முதன்முறையாகும். இச்சந்திப்பில் வவுனியா சிவன் கோயில் தீர்மானங்கள் சனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டன. பௌத்தத்தில் மகாநாயக்க பீடங்கள் போல, சைவத்திற்கு ஆதீனங்களே முதன்மைத் தலைமைப் பீடங்கள் என்பதும் வலியுறுத்தப்பட்டது.

இச்சந்திப்பின் போது, நாட்டின் எதிர்காலச் சந்ததியைச் சீரழிக்கும் போதைப்பொருள் பேரழிவை ஒழிப்பதற்குச் சைவக் குருமார்கள் தமது அருளாசிகளை வழங்கியதுடன், போதை ஒழிப்பில் குருமாரின் பங்களிப்பும் எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன், தேசியத் தேவைகளின் போது சைவக் குருமார்கள் ஒன்றிணைந்து செயற்படும் பொறிமுறையொன்றை உருவாக்குதல், அறநெறிப் பாடசாலைகளை நடாத்துதல் மற்றும் சைவப் பெருமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளுக்கான தீர்வுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன. நாட்டின் அமைதி மற்றும் ஆன்மீக எழுச்சியை முன்னிறுத்தி இச்சந்திப்பு நிறைவுற்றது.

**திருச்சிற்றம்பலம்**

# திங்கள்தோறும் தென்னாடு உழவாரம்



திருத்தொண்டு நெறிவாழ உதித்த ஞானத்தவ முனிவராம் திருநாவுக்கரச நாயனாரின் வழியில், இளையோர்களை உழவாரப்பணியில் ஈடுபடுத்திச் சைவ நெறியை வளர்க்கும் உயரிய நோக்கோடு தொடங்கப்பெற்ற **"தென்னாடு உழவாரப்படையினர்"** தங்களது மூன்றாவது திங்கள் உழவாரப் பணியினை 06-09-2026 அன்று மானிப்பாய் மருதடி விநாயகர் திருக்கோயிலில் மிகச் சிறப்பாக முன்னெடுத்திருந்தனர். கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் வழிகாட்டலில் இயங்கும் இவ் உழவாரப் படையில் 25 அடியார்கள் பங்கேற்று, திருக்கோயிலின் உள்வீதி, வெளிவீதிகள் மற்றும் உள்மண்டபங்களை மிகத் தூய்மையாக உழவாரம் செய்தனர்.

இந்நிகழ்வில் தென்னாடு காரைக்கால் அம்மையார் விடுதி மாணவர்களும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறை மாணவர்களும் எனப் பலர் பங்கேற்றுத் தொண்டாற்றினர். இதற்கான இலவசப் போக்குவரத்துச் சேவையினைக் கொக்குவில் பொற்பதி சிவத்திரு. சிவகுமார் மயூரன் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். அத்துடன், அடியார்களுக்குக் காலை உணவினைச் சைவ மாணவர் சபைத் தலைவர் சிவத்திரு. வனராஜ் சசிராஜ் அவர்களும், சிற்றுண்டி மற்றும் மதிய உணவினை மருதடி விநாயகர் திருக்கோயில் நிர்வாகக் குழுவினரும் வழங்கி உதவியிருந்தமை போற்றுதலுக்குரியதாகும்.

மானிப்பாய் பகுதியில் சைவத்தினை வளர்க்கவேண்டும், இளையவர்களை குறிப்பாக மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இயங்கும் மருதடி விநாயகர் திருக்கோயில் தலைவர் சிவத்திரு. சிவதர்ப்பாகரன் மற்றும் திருக்கோயில் நிர்வாகத்தினர் அனைவருக்கும் எங்கள் சிவமடத்தின் சார்பில் நன்றிகளை தெரிவித்து மகிழ்கின்றோம்.

**திருச்சிற்றம்பலம்**

# தருமபுரம் ஆதீனம் குருமகாசந்நிதானம் அவர்களின் யப்பான் பயணம்

மயிலாடுதுறை தருமபுரம் ஆதீனத்தின் 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளசீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஐந்து நாள் ஆன்மீகப் பயணமாக யப்பான் நாட்டிற்கு எழுந்தருளியிருந்தார். உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் சைவ நெறியையும் திருமுறைச் சிறப்பையும் பரப்பும் உயரிய நோக்கோடு மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பயணத்தில், இந்திய மற்றும் யப்பானிய ஆன்மீகக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்த உலக அமைதி மாநாட்டில் குருமகாசந்நிதானம் கலந்துகொண்டு சிறப்பித்தார். உலகளவில் அமைதியும், சமூக உறவும், ஆன்மீக விழிப்புணர்வும் பெருகவேண்டி நடத்தப்பெற்ற இம்மாநாட்டில் பங்கேற்றதோடு, அங்குள்ள முதன்மை வழிபாட்டுத் தலங்களுக்கும் நேரில் சென்று அருளாசிகளை வழங்கினார்.



இப்பயணத்தின் மிக முக்கிய நிகழ்வாக, 07-09-2026 அன்று யப்பானின் செண்டாய் மாநிலத்தில் பாயும் வரலாற்றுச் சிறப்புமிக்க கிரோசே ஆற்றங்கரையில் உலக நன்மை வேண்டிச் சிறப்புத் தீப வழிபாடு நடைபெற்றது. நிலநடுக்கம், புயல், ஆழிப்பேரலை போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து உலக உயிர்களைக் காக்கவும், இயற்கை அன்னை வளமருளவும் வேண்டித் தமிழர்ப் பண்பாட்டு முறைப்படி ஆற்றிற்கு மலர் தூவி, மணி விளக்குகள் ஏற்றிப் பெருவழிபாடு நிகழ்த்தப்பட்டது. இந்த வழிபாட்டு முறைகள், அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான ஜப்பானியர்களுக்குப் புதிய ஆன்மிக அனுபவத்தையும் அமைதியையும் வழங்கியது. தருமபுரம் ஆதீன குருமகாசந்நிதானத்தின் இந்த ஐந்து நாள் ஆன்மீக மற்றும் பண்பாட்டுப் பரிமாற்றத்திற்கு வழிவகை செய்துள்ளது.

**திருச்சிற்றம்பலம்**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# தீர்ப்பு மாறட்டும்!

**“அன்பே சிவம்”** என்று திருமூலர் அருளிய தமிழ்ச் சைவ மரபு, இறைவனை அடைவதற்கான வழியாக அன்பையும் அருளையும் உயிர் இரக்கத்தையும் முன்னிறுத்துகிறது. பிற உயிரைத் துன்புறுத்தாமை, பிறருடைய நம்பிக்கையை மதித்தல், தவறு செய்தவரிடத்தும் கருணை காட்டுதல் ஆகியவை சைவச் சிந்தனையின் ஆழமான அறக்கூறுகளாகும். இத்தகைய அருள்நெறியின் வெளிச்சத்தில் இன்று உலகின் கவனத்தை ஈர்த்துள்ள ஒரு மனிதநேயப் பிரச்சினையை நாம் அணுக வேண்டியுள்ளது.

சவூதி அரேபிய நாட்டில் இலங்கையைச் சேர்ந்த சிவராசா அனோஜனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக வெளியாகியுள்ள செய்தி பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. இசுலாமிய நெறி மற்றும் நபிகள் நாயகம் தொடர்பாக சமூக ஊடகத்தில் அவமதிப்பான கருத்தை வெளியிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட அவருக்கு முதலில் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டதாகவும், பின்னர் அரசுத் தரப்பு மேல்முறையீட்டின் தொடர்ச்சியில் மரணதண்டனை விதிக்கப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலில் ஒன்றைத் தெளிவாகக் கூற வேண்டும். ஒருவருடைய சமய நம்பிக்கையையும் அவர் புனிதமாகக் கருதும் இறைநெறியையும் அவமதிப்பது பண்பட்ட உரையாடல் அல்ல. சைவம் பிற சமயங்களை இகழ்ந்து தன்னை உயர்த்திக் கொள்ளும் வழியை ஒருபோதும் கற்பிப்பதில்லை. **“யாதும் ஊரே யாவரும் கேளிர்”** என்ற தமிழறத்தின் பரந்த பார்வையும், **“அன்பே சிவம்”** என்ற திருமந்திரத்தின் மெய்யுணர்வும் இதற்குச் சான்றுகளாகும்.

அதேவேளை, ஒரு மனிதனின் அதீத கோபத்தினால் வெளிவந்த, தவறான சொல் அல்லது செயல் அவனது உயிரைப் பறிப்பதற்கான காரணமாக ஆகிவிடக்கூடாது. மன்னிப்பு என்பது குற்றத்தை ஆதரிப்பது அல்ல; மனிதனுக்குத் திருந்துவதற்கான வாய்ப்பை வழங்குவதாகும்.

சைவ சித்தாந்தம் பசு, பதி, பாசம் என்ற முப்பொருளை விளக்குகிறது. உயிர் என்பது இறைவனுடைய அருளை நோக்கிச் செல்லும் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. அந்த உயிரின் மதிப்பை உணர்ந்த சைவ மரபில் உயிர் இரக்கம் உயர்ந்த அறமாக விளங்குகிறது.

அந்தப் பார்வையில், அனோஜன் விவகாரத்தில் மனித உயிரைக் காப்பாற்றுவதற்கான மன்னிப்பையும் தண்டனைக் குறைப்பையும் கோருவது எந்த மதத்திற்கும் எதிரான செயல் அல்ல. மத உணர்வுக்கு மரியாதை அளிப்பதும் மனித உயிருக்கு இரக்கமளிப்பதும் ஒன்றோடொன்று எதிரானவை அல்ல.

இந்நிகழ்வு இலங்கையின் சமய நல்லிணக்கத்திற்கும் ஒரு முக்கியமான சோதனையாக அமைகிறது. ஒரு தனிநபரின் செயலை ஒட்டுமொத்த இசுலாமிய சமுதாயத்தின் மீது சுமத்துவதும் தவறு; அதேபோன்று ஒரு குறிப்பிட்ட சட்ட நடவடிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சமயத்தையே குற்றவாளியாகச் சித்திரிப்பதும் தவறு. கருத்து வேறுபாட்டை வெறுப்பாக மாற்றாமல் இருப்பதே நல்லிணக்கத்தின் அடிப்படை.

சைவம் நமக்குக் கற்பிப்பது அருள் வழி! அன்பு வழி! அறம் வழி. எனவே, இந்த விவகாரத்தில் இலங்கை அரசு தொடர்ந்து அரசுறவியல் மற்றும் சட்டமுறைசார் முயற்சிகளை மேற்கொண்டு, மன்னிப்பு அல்லது தண்டனைக் குறைப்புக்கான வாய்ப்பை நாட வேண்டும். அதேவேளை, அனைத்து சமயத்தினரும் ஒருவரது புனித நம்பிக்கைகளை மற்றொருவர் மதிக்கும் பண்பாட்டை வளர்க்க வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

# சிவபுராண விளக்க உரை



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

**58).”நலம்தான் இல்லாத சிறியேற்கு நல்கி”**

**நல்குதல்:- இறங்குதல்**

நல்கி என்னும் எச்சம் (பொருள் முழுமை பெறாமல் எஞ்சியிருக்கும் சொல் எச்சம்) எண்ணின் கண் வந்தது.

**நல்கி:- இறங்கி**

பக்குவம் வருவதற்கு முன்பு அம்மை திரோதான சத்தியாக நின்று உயிரை செயல்படுத்தி, ஆணவ மலத்தை வலிமையை குறைத்து பக்குவப் படுத்துகிறாள். அம்மை தானும் ஒரு மலமாக நின்று அருள் புரிகின்றாள். மலங்கள் ஐந்து ஆணவம்

கன்மம், மாயை, மாயேயம், திரோதான சத்தி என்பதை இங்கு நினைவு கூறலாம்.

உயிர்களைக் கேவலத்திலிருந்து எடுத்து தனு,கரண, புவன, போகங்கள் கொடுத்து சகலத்தில் ஆணவ மலத்தின் வலிமை குன்றச் செய்து, உயிரை திருவடியின் கீழ் வைக்க அருள் செய்கிறான். இதைதான் **“நல்கி”** என்று கூறுகிறார் மணிவாசகர்.

**“நல்கி”** என்றது திரோதான சத்தியோடு இயந்து நின்று மறைத்தலைச் செய்தலையும், **“கழல்கள் காட்டி”** என்றது அருள் சத்தியோடு இயைந்து நின்று அருளலைச் செய்தலையும் அருளினார் என்க. ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் அவற்றோடு நின்ற இறைவன் சத்தியே நடத்துகின்றது என்பதையும் கூறுகிறார். மேலும் அச்சத்தி திரோதாயி (மறைப்பது) என்னும் பெயருடையதாய். மலம் என்று சொல்லப்படுகின்றது என்பதையும் ஆணவமலம் பரிபாகம் அடைந்தபோது அதுவே அருள் சத்தியாய் ஆன்மாவின் இடத்தில் பதியும் என்பதையும்,




பேராசிரியர் சித்தாந்த
சைவச் சுடர்மணி
மீ.சிவசண்முகம்,
கோயம்பத்தூர்,
தமிழ்நாடு.


**“ஏயும் மும்மலங்கள் தத்தம் தொழிலினை செய்ய ஏவும் தூயவன்றதோர் சத்தி துரோதான கரி”** என்று சித்தியர் (287) கூறுகிறது.

**“பாகமம் வகை நின்று துரோதான சத்தி**
**பண்ணுனதலால் மலம் எனவும் பகர்வர் அது பரிந்து**
**நாகமா நதிமதியம் பொதிசடையான் அடிகள் நணுகும் வகை கருணை மிக நயங்கும்**
**தானே நயக்குந் தானே”** - சிவப்பிரகாசம் (20) கூறுதலால் அறிக.

இங்ஙனம் திரோதான சத்தியோடு இயந்து நின்று

மலங்களை ஏவி மயக்க உணர்வை உண்டாக்குதலாகிய மறைத்தலைச் செய்தலே பந்தம் என்றும், அருள் சத்தியோடு இயைந்து நின்று மலங்களை நீக்கி மெய்யுணர்வு உண்டாக்குதலே வீடு என்றும் சொல்லப்படும். ஆகவே பந்தமும் வீடும் இறைவன் இன்றி ஆகாது. பந்தமும் அவனே வீடும் அவனே என்கின்றன உண்மை நூல்கள்.

**"பந்தம் வீடவை யாயப் பராபரன்," 5/ 7 /2**

**"பந்தமும் வீடும் படைப்போன் காண்க" 8/3/52**

**"பந்தமும்மாய் வீடும் ஆயினா ருக்கு" 8/9 /20**

என்னும் திரு மொழிகள் காண்க. மறைத்தலும், மலபரிபாகம் வருதற்பொருட்டேயாகலின் கருணையேயாம். இது மறக்கருணை என்றும், அருளல் அறக்கருணை என்றும் சொல்லப்படும். ஆதலின், பந்தமாய் நின்று மறைத்து வந்ததையும் "நல்கி" என அருள் செய்தார். என்பது அருணையார் உரை.

**59)."நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி"**

நிலந்தன் மேல் வந்தருளி:– உலகம் மாயையின் காரியம். பெரிய பெருமான் மல மாயைகளில் ஓயாதவர். ஆன்மாக்களை உய்யக்கொண்டருளும் திருவுளத்தினாலே கண்ணுதலும் கண்டக்கரையும் மறைத்து மானிடச் சட்டை சாத்திக் குரு வடிவாக எழுந்தருளி. இது குருந்தமரத்தடியில் குருவாக இறைவன் எழுந்தருளக் கண்டதை காட்டியதாம்.

**நீள்கழகள்:- "பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்'**

பாதாளம் ஏழினுக்கும் திருவடிகள் நீண்டன என்பதையே **"நீள் கழல்கள்"** என்று சொல்லுகிறார். ஆதலின் இங்ஙனம் கூறியது என்க. என்பது மகாவித்வான் தண்டபாணி தேசிகர் உரை.

நிலத்தின் மேல் வந்தருளி என்பது உயிர்கள் உய்வடையும் பொருட்டு பெருமான் தானாக வந்து அருளினான். இதையே மாணிக்கவாசகரும் **"தானே வந்து எனது உள்ளம் புகுந்து"** என்று திரு ஏசறவிலும் **"தானே வந்து தலையளித்து ஆட்கொண்டருளும்"** என்று திருவம்பாவையிலும் அருளுகிறார்.

பெருமான் சுத்தமாயபுவனத்துக்கு மேலே உள்ள பரவளியில் ஆணவம் கலவாத இடத்தில் உள்ளவன். அசுத்தமாயை, பிரகிருதி மாயை போன்றவை அசுத்தம் நிறைந்தது. ஆனால் உயிர்கள் உய்வடையும் பொருட்டு இந்த அசுத்தம் நிறைந்த உலகத்திற்கு வருகிறான் அதைத்தான் "நிலந்தன் மேல் வந்தருளி" என்கிறார் மாணிக்கவாசகர்.

**மேலும் திருவம்பாவையில் "கூசுமலர் பாதம் தந்தருள வந்தருளும் தேசம் சிவலோகன் தில்லை சிற்றம்பலத்துள்..." என்று கூறுகிறார்.**

**"தந்தருள"** என்பது அவனுடைய பண்பை காட்டுகிறது. **"வந்தருளும்"** என்பது அவனுடைய செயலை காட்டுகிறது. **"நிலந்தன் மேல் வந்தருளி"** என்றால் பெருமான், திருச்சிற்றம்பலத்திற்கு வந்தார் என்று பதிவு செய்கிறார் மணிவாசகர்.

நாம் அடைய வேண்டியது இறைவன் திருவடி தான் என்று வள்ளுவரும் கூறுகிறார்

**மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார் நிலமிசை நீடு வாழ்வார்,
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்.**

**வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.**
என்கிறார்.

**"கண்டேன் அவர் திருப் பாதம் கண்டறியாதன கண்டேன்"** என்கிறார் திருநாவுக்கரசு பெருமான்.**"காட்டாதனை எல்லாம் காட்டி சிவக்காட்டி தாள்த்தாமரை காட்டி தன் கருணை தேன்காட்டி"** என்கிறார் திரு அம்மானையில் மணிவாசகர்.

பெருமானுடைய நீள்கழல்கள் பாதாளம் ஏழினுக்கும் செல்லும் என்று கூறுகிறார் மணிவாசகர். **"பாதம் இரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கு அப்பால்"** என்ற குயில் பத்தில் கூறுகிறார்.

அதலம், விதலம், சுதலம், தராதலம், ரசாதலம், மகாதலம் அடுத்தது பாதாளம் உள்ளது என்கிறார்கள். **"நீள் கழல்கள்"** எனும் போது சித்தவட மடத்தில் சுந்தர சுந்தரமூர்த்தி நாயனார் திருவடி தீக்கை பெற்றதை இங்கு நினைவு கூறலாம்.

சுந்தரர் உறங்குவதைத் தெய்வச் சேக்கிழார், **"பரிசனமும் துயில் கொள்ளப் பள்ளி அமர்ந்தருளினார்"** என்று கூறுகிறார். அதே சமயம் பெருமான் துயில் கொள்வதை **"பூந்தாரான் திருமுடி மேல் பதுமமலர் தாள் வைத்துப் பள்ளி கொள்வார் போல் பயின்றார்"** என்று அருளுகின்றார்.

திருவதிகை விரட்டானத்து உரையும் தேவ தேவர், கீழ வேதியர் வடிவம் தாங்கி மடத்துள் வந்து சுந்தரர் உடைய தலையின் மீது திருவடியை வைத்து தூங்குபவர் போல அமைந்தருளினார். நம்பியாரூரர் எழுந்து ஐயரே உமது பாதத்தை ஏன் என் தலை மேல் வைத்தீர்? என்று கேட்டார். இறைவன், அப்பனே தளர்ந்த கிழப்பருவத்தினாலே திசை தெரியாமல் கால் உன் மீது பட்டுவிட்டது போலும் என்றார். நம்பியாரூரர் வேறொரு புறத்தில் போய் படுத்து கொண்டார். ஐயன் அங்கிருந்தபடியே தனது கால்களை நீட்டி (நீள் கழல்கள் காட்டி) நம்பியாரூரரின் சென்னியின் மீது திருவடியை வைத்து அருளினார். வண் தொண்டர் எழுந்து என்ன ஐயா பலகாலும் இப்படி மிதிக்கின்றீரே? நீர் யார்? என்றறார். எம்பெருமான் என்னை அறிந்திலையோ என்று மறைந்து அருளினார். உடனே சுந்தரர் திடுக்கிட்டு அதிகை மேவும் அமலனே! ஆலமுண்ட அண்ணலே! இந்த இரவில் இங்கு எளியேன் பொருட்டு எழுந்தருளி வேத ஆகமங்களும் காணாத உமது திருவடிகளை சிறியேன் சென்னியில் வைத்து அருளினாய் எனது தவமே தவம் என்று துதித்து, **"தம் மானை அறியாத சாதியாருளரே..."** என்று திருப்பதிகம் பாடினார்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## கி.பி. 19 ஆம் நூற்றாண்டு வரலாற்றுத் தொடர்புடைய பனங்காடு அருள்மிகு பாசுபதேசுவரர் திருக்கோயில்



ஈழத் திருநாட்டின் தெற்குப் பக்கமாக விளங்குவது எழில் கொஞ்சும் அம்பாறை மாவட்டம். அம்மாவட்டத்தின் அக்கரைப்பற்று நகரிலிருந்து சுமார் இரண்டு மைல் தொலைவில், சாகாமம் வீதியில் அமைந்த பழம்பெரும் பதியூர் பனங்காடு ஆகும். அற்புத ஆற்றல்களோடு அடியவர் பெருமக்களுக்கு அருள்மழை பொழியும் சிவபரம்பொருளாக அருள்மிகு பாசுபதேசுவரப் பெருமான் இத்தலத்தில் எழுந்தருளி அருளாட்சி புரிந்து வருகின்றார்.

### திருத்தல அமைவிடமும் ஊர் வரலாறும்

கிழக்கு மாகாணத்தின் தொன்மைமிக்க வரலாற்றுச் சிறப்புகளையும் வரலாறுகளையும் தன்னகத்தே தாங்கி நிற்கும் அற்புத கிராமங்களுள் பனங்காடும் ஒன்று. ஆறு, குளம், கடல் என இயற்கை நீர்நிலைகள் இயைந்து, செந்நெல் விளையும் வளமிக்க உயிர்ச்சத்தி நிறைந்த பூமி இதுவாகும்.

கி.பி. 2 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் ‘தாடகிரி’ எனும் குறுநில இராசதானி ஆட்சியில் முக்கிய கேந்திர நிலையமாக பனங்காடு நிலவியுள்ளது. சங்ககாலத்தில் நிலவிய நடுகல் வணக்கம் இங்கும் வழக்கிலிருந்ததற்குச் சான்றாக எச்சங்கள் காணப்படுகின்றன. போர்த்துக்கீசரின் ஆதிக்கத்தின் போது இந்நடுகல் வழிபாடு அழிவுற்றதாகக் கூறப்படுகின்றது.

பின்பு 15 ஆம் நூற்றாண்டுப் பகுதியில், வணிக நோக்கம் கருதி தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த செட்டிமார், இவ்வூர்ப் பெண்களைக் கைப்பிடித்து காடுகளைத் துப்பரவு செய்தபோது கிடைத்த நடுகல் எச்சங்களை ஒன்றாகத் திரட்டி, ‘மாவிவாங்கை’ மரத்தடியில் நிறுவி, தங்களின் வணிகத் தெய்வமாகிய ஐயனாருக்குச் சிறுகோயிலும் படிமமும் அமைத்துப் போற்றினர். 17 ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற **“ஐயனார் அகவல்”** எனும் பிரபந்த நூலில் இவ்வூரின் பண்டைய பெயர் **“பனங்காமணச்சோலை”** எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.




சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு


19ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், தென்னிந்தியாவிலிருந்து வருகை தந்த சித்தானைக்குட்டிச் சித்தரின் அருள்வாக்கால் அவ்விடத்தில் எம்பெருமானுக்குக் திருக்கோயில் எழுப்பப்பெற்று, **‘அருள்மிகு பாசுபதேசுவரர் திருக்கோயில்’** என மடைமாற்றம் பெற்றது.

### திருத்தல தலவரலாறு

தொன்மைமிக்க ஐயனார் கோயிலின் மகிமையை உணர்ந்த சித்தானைக்குட்டி சித்தர், பனங்காட்டிற்கு எழுந்தருளிப் பல திங்கள் தங்கியிருந்தார். ஒருநாள் தனது கால் பெருவிரலினால் நிலத்தில் கோடிட்டுக் காட்டி, அவ்விடத்தில் சிவாலயம் அமைக்குமாறு அருளுரைத்தார்.

அவரது அருள்வாக்கின்படி ஊர்மக்கள் ஒன்றுகூடி ஆச்சாரி ஒருவரை அழைத்து மனையெடுக்கப் பணித்தபோது, சித்தர் குறிப்பிட்ட இடமும் ஆச்சாரி கணித்த இடமும் ஒன்றாக அமைந்திருப்பதைக் கண்டு ஊரவர் வியந்து போற்றினர். ஊர்ச் செல்வந்தர்களின் திரவிய உதவியுடன் எம்பெருமானுக்கு திருக்கோயில் உதயமாகியது.

தற்போது சிற்பாகம விதிப்படி இருதளங்களைக் கொண்ட விமானம், முகமண்டபம், உட்பிரகாரங்கள், பரிவாரத் தெய்வங்களின் கோட்டங்கள், கொடிமரம், யாகசாலை, மடப்பள்ளி என்பன அமையப்பெற்று மிக விசாலமான பெருங்கோயிலாகத் திகழ்கின்றது. 1963 ஆம் ஆண்டு முதற்குடமுழுக்குக் கண்ட இச்சிவாலயம், தொடர்ந்து 1988, 2007, 2020 ஆகிய ஆண்டுகளிலும் நன்னீராட்டு விழா கண்டு புத்தெழிலுடன் மிளிர்கின்றது.

### மூர்த்தியின் சிறப்பும் பாசுபத மகிமையும்

ஓர் ஆகமச் சிவாலயம் கொண்டிருக்க வேண்டிய மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புகள் அனைத்தையும் இத்திருத்தலம் பெற்றுள்ளது. இத்தலத்தில் பாசுபதேசுவரப் பெருமானோடு மாதுமை அம்பிகையும் உடனுறைந்து அருள்மழை பொழிகின்றார். ‘பாசுபதேசுவரர்’ எனும் திருநாமம் தாங்கிய சிவவடிவம் ஈழத்துத் தென்பகுதியில் எழுந்தருளி அருளாட்சி




புரிவது இத்தலத்தின் தனிப்பெரும் கீர்த்தியாகும்.

மகாபாரதத்தில் பெரும் வில்லாளியான பார்த்தனன் (அருச்சுனன்), கௌரவர்களை வெல்லும் பொருட்டு எம்பெருமானை நோக்கி காட்டில் கடுந்தவம் புரிந்தான். அவனது தவத்திற்கு இரங்கிய எம்பெருமான், வேடர் (கிராதர்) திருக்கோலம் பூண்டு காட்சி தந்தருளி, கௌரவர் களை வெல்லவல்ல 'பாசுபதம்' எனும் பேரம்பினைப் பரிசளித் தருளினார்.

இதனாலேயே இறைவன் 'பாசுபதமூர்த்தி' எனப் போற்றப்பெற்றார். இத்திருவிளையாடலை,

**"அருச்சுனருக்கு அருள்செயக் கருதும் வேடத்தாள்"**

**- (திருஞானசம்பந்தப் பெருமான்)**

**"ஞான வேடன் விசயற் கருள் செயும் கான வேடன்"**

**- (திருநாவுக்கரசு பெருமான்)**

என்று தேவாரப் பாடல்களில் பாடிப் பரவியுள்ளனர். தமிழ்நாட்டில் திருவேட்டக்குடி, திருவெம்பூரம் ஆகிய தலங்களில் விளங்குவது போல், ஈழத்து நிலத்தில் பனங்காட்டில் வீற்றிருக்கும் பாசுபதேசுவரரை வழிபட்டு முத்திப்பேறு பெறலாம்.




### பூசை மரபும் திருவிழாக்களும்

இத்திருக்கோயிலில் நாள்தோறும் நித்திய பூசைகளும், ஊர்க்குடி வழக்கின்படி வருடாந்த பெருந்திருவிழாவும் ஆகம நெறிப்படி நடைபெற்று வருகின்றன.

சிறப்புத் திருவிழாக்கள்: மாம்பழத் திருவிழா, வேட்டைத் திருவிழா, தெப்பத் திருவிழா, தீர்த்திருவிழா.

விரத நன்நாட்கள்: சிவனிரவு, கழுவாய், கேதாரகௌரி விரத வழிபாடுகள் மற்றும் விழாக்காலச் சிறப்புப் பூசைகள்.

### திருத்தல வரலாற்று சான்றுகளும் பிரபந்தங்களும்

இத்தலத்தின் தொன்மையை உணர்த்தும் முதன்மைச் சான்றாக **"பனங்காட்டு ஐயனார் அகவல்"** எனும் பாடல் திகழ்கின்றது. மேலும் 2020 ஆம் ஆண்டு வெளியிடப்பெற்ற திருக்குட நன்னீராட்டு மலர், பிரதேச ஆய்வாளர்களின் கட்டுரைகள், உள்ளூர்ச் சான்றோர்களின் பத்திச் சிற்றிலக்கியங்கள் என்பன வரலாற்று ஆவணங்களாக விளங்குகின்றன.

வில்லிபாரதத்தின் ஆரணிய பருவத்தில் அருச்சுனன் தவநிலைச் சருக்கத்தில் இத்திருவருள் திறன் பின்வருமாறு போற்றப்படுகின்றது:

**"ஐயனும் அம்மையோடருள் புரிந்து பின்**
**வெய்ய பொற்றாணியும் வில்லுமந்தரமும்**
**தூய்ய பாசுபத மெய்த தொடையுமுடிய**
**மொய்யென நிலையுடன் உதவினானரோ"**
**- வில்லிபாரதம் (ஆரணியபர்வம் - அருச்சுனன் தவநிலைச் சருக்கம்)**

# ஈழத்துச் சித்தர்கள்

# கடையிற் சுவாமிகளும் சீடர்களும்



சித்த வைத்தியர்
கணேஸ் கபிலன்
(யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்)

(சென்ற திங்கள் தொடர்ச்சி)

## உசன் சமாதி மடம்

இம்மடத்திற்கு அருகாமையில் பொன்னம்மா மடம் இருந்து வந்தது. இதில் பொன்னம்மா சமாதியும், இதற்கருகாமையில் அம்மன் சிலையையும் வைத்து பொன்னம்மாவின் உறவினர் வழிபாடு செய்து வந்தனர். மங்கயற்கரசி அம்மா, இங்கிருந்த அம்மன் சிலையை தனது மடத்திற்கு மாற்றி, இதற்குப் பூசைகளைச் செய்து வந்தார். அத்தோடு பொன்னம்மா சமாதியடைந்த (கார்த்திகை உத்தர நட்சத்திரம்) குருபூசையையும் தானே தனது மடத்தில் செய்து வந்தார்.

மங்கயற்கரசி அம்மாவின் குருவாக இருந்த ஏழாலை சடைவரத சுவாமியின் சமாதி நிலையை பொன்னம்மா அவர்களே ஏழாலை மயானத்தில் செய்து, ஓர் மடத்தையும் கட்டி வைத்தார். (இதுவும் பிழையான கருத்து பொன்னம்மாவுக்கு சமாதி காரியம் செய்தவர் தான் சடைவரத சுவாமிகள்) மங்கயற்கரசி அவர்கள் தமது குருவாகிய சடைவரதரின் குருபூசையையும், பொன்னம்மா அவர்களின் குருபூசையையும் இம்மடத்திலேயே ஆண்டு தோறும் செய்து வந்தார்.

சடைவரதர் சுவாமியின் சமாதியையும், தனது உசன் மடத்தில் கட்ட வைத்தார். (இக்குறிப்பில் கூறப்பட்ட தகவல் சற்று பிழையான தகவலாக உள்ளது. ஏழாலையில் சமாதியடைந்த சடைவரதருக்கு ஏழாலை மயானத்தில் சமாதி வைக்கப்பட்டதாக ஒரு சிலர் கூறுகின்றனர். இப்போது இருப்பவர்கள் அவரை தகனம் செய்து விட்டதால் அவருக்கு சமாதி வைக்கவில்லை என்றும் கூறுகின்றனர்) இவர்களின் குருபூசைகளுக்கு ஏழாலை, சுன்னாகம் ஆகிய கிராம மக்கள் பெரிதும் உதவினர். குறிப்பாக ஆயுள்வேத வைத்தியர் திரு. பேரம்பலம் அவர்கள் பெரிதும் உதவி வந்துள்ளார்.

மங்கயற்கரசி அம்மாவின் இளைய சகோதரி மங்களம் அவர்கள் தமது கணவனை இழந்துவிட்டார். இவருக்குப் பிள்ளைகளும் இல்லாத காரணத்தால் இம்மடத்திலேயே வாழ்ந்து வந்தார். இவர் சிறிது காலத்தில் மரணம் அடைந்துவிட்டார். இவரது மரணச்சடங்கு மங்கயற்கரசி அம்மா ஈச்சங்காட்டுச் சுடலையில் செய்து வைத்தார். மங்கயற்கரசி அம்மா 1953 ஆம் ஆண்டு தமது வாரிசாக, ஏழாலையைச் சேர்ந்த நாகலிங்கம் குணரத்தினம் என்பவரை ஏற்றுக்கொண்டார். இவரைப் படிக்க வைத்து ஆயுள்வேத மருத்துவராக்கினார். இரண்டாம் சகோதரியாகிய வாலாம்பிகை அம்மா (சிந்தாமணி) தைத் திங்கள் பூர நட்சத்திரத்தில் சமாதியான இவரது சமாதிப் பேற்றையும் மங்கயற்கரசி செய்து வைத்தார். மங்கயற்கரசி அம்மா 1975 ம் ஆண்டு 7ம் திகதி கார்த்திகை உத்தர நட்சத்திரத்தில் (88வது வயதில்) சமாதியானார். இவரின் சமாதிப் பேற்றை இவரது வாரிசு



குணரத்தினம் அவர்கள் செய்து வைத்தார்.

சிவத்திரு ந. குணரத்தினம் அவர்களுக்கு எழுதிய மரண சாசனத்தின் படி மேற்கூறிய நால்வரது குருபூசைகளையும், வருடந்தோறும் செய்து வருகின்றார். இடப்பெயர்வு காரணமாக தற்போது புன்னாலைக்கட்டுவனில் (தற்காலிகமாக) செய்து வருகின்றார். உசன் மடத்தை புனர்நிர்மானம் செய்யும் பணியில் திரு. குணரத்தினம் ஈடுபட்டுவருகின்றார்.

இம்மடத்துடன் ஈழத்தில் உள்ள பல சுவாமிகள் தொடர்புள்ளவர்களாக, இருந்து வந்துள்ளனர். குறிப்பாக யோகர் சுவாமிகள், மட்டக்களப்பைச் சேர்ந்த சித்தானைக்குட்டிச் சுவாமிகள், ஏழாலை சடைவரத சுவாமிகள் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களும் இடப்பெயர்வின் போது இம்மடத்தை தரிசித்துள்ளார்.

மேலும் உசன் மடத்தை பற்றி உசன் பதி முத்துமாலை எனும் நூலில் திருமதி சி. சரவணமுத்து அம்மா எழுதிய குறிப்புகள் கீழ்வருமாறு. இதிலும் சில குழப்பமான தகவல்கள் உள்ளன.

### உசன் சமாதி மடம்

எமது கிராமத்தில் உசன் சமாதி மடம் என்ற பெயருடன் ஓர் மடமும் பழைய வரலாறாக இருக்கின்றது. தென்மராட்சிப் பகுதியிலே உசன் கிராமத்தில் மட்டும் தான் இப்படி ஓர் சமாதி மடம் இருப்பதாக பலர் கூறுவார்கள். ஆனால் இந்தச் சமாதி மடம் எப்போ? யாரால்? கட்டப்பட்டது என்று உடனடியாக இப்போது அறிய முடியவில்லை. எனது சிறு பராயத்தில் இந்தச் சமாதி மடம் இருப்பதை யானும் அறிவேன். 1942ஆம் ஆண்டளவில் எனது 10 வயதில் சமாதி மடத்திற்கு நானும் அடிக்கடி போய்வந்த ஞாபகம் நிறைய உண்டு. அதன்படி இந்தச் சமாதி மடம் ஓர் இறை பத்தரான சாமியார் ஒருவர் காலம் சென்ற பின்பு அந்தச் சாமியார் அவர்களை இந்த இடத்திலே சமாதி வைத்து கட்டிய மடமானபடியால் இன்று வரை உசன் சமாதி மடம் என்ற பெயருடன் விளங்கி வருகின்றது. (இதில் சாமியார் என்று கூறப்பட்டது சடைவரத சுவாமிகள் என்று நினைக்கிறேன். ஆனால் அவரது சமாதி இங்கு இல்லை. ஒருவேளை அவருக்கு நினைவாலயம் வைத்திருக்கலாம். அவரது குருவான பொன்னம்மாள் அம்மைக்கு தான் சமாதி உள்ளது. சடைவரத சுவாமிகளின் குருவாக இருந்த முருகேசு சுவாமிகளுக்கு சமாதி உள்ளதா என்பது அறியமுடியாமல் உள்ளது.)

இந்தச் சமாதி மடத்திற்கு 65 வருடங்களுக்கு முன்பு சிறுபிள்ளை விளையாட்டாக நானும் போய் வரும் காலத்தில் அங்கு 60, 65 வயதுடைய ஓர் அம்மா நீண்ட கூந்தலுடன் வாழ்ந்து வந்துள்ளதைப் பார்த்திருக்கின்றேன். அப்போது நாங்கள் பலர் அந்த அம்மாவினுடைய நீண்ட கூந்தலை அதிசயமாகப் பார்ப்போம். இந்த அம்மா தனது நீண்ட கூந்தலை நிலத்தில் படாவண்ணம் கீழே பாய் விரித்து கூந்தலை உலர வைப்பதை அதிசயமாகப் பார்ப்பதுமுண்டு. இந்த நீண்ட கூந்தலுடன் பல காலம் இங்கு வாழ்ந்தபடியால் சடையம்மா மடம் என்றும், உசன் சமாதி மடம் என்றும் பலர் கூறுவார்கள்.

இங்கு சடையம்மாவுடன் பல கன்னிப் பெண்களும், சாமிமார்களும் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்த மடத்திலே சமாதி வைத்தவரின் அறையில் தினமும் பூசை செய்வதுடன் வெள்ளிக்கிழமைகளில் விசேட பூசையும், கூட்டுப்பாடல் செய்து வணங்கி வருவார்கள். வெளியூர்களிலிருந்தும் பல பெரியோர்கள், சாமிமார்கள் அடிக்கடி வந்து வணங்கி தங்கியும் போவார்கள். இந்தச் சமாதி மடம் உசன் கிராம மக்களுக்கு நல்ல பண்பான வாழ்வியலை வழங்க வைக்கும் மடமாக விளங்கி வந்துள்ளதும் உசன் கிராமத்திற்கு ஓர் சிறப் பாகும். இன்றுவரை பல

சூழ் நிலைகள் மாறிய போதும் மடத்திற்கு எதுவித சேதமுமில்லாமல் உசன் சமாதி மடம் என்ற பெயருடன் விளங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சமாதி மடத்திற்கு நானும் விளையாட்டாக போய் வந்து பார்த்த, வணங்கிய, பல நிகழ்ச்சிகளின் பலனாலும் பழைய வரலாறாக என் நினைவில் வந்ததை உசன் மக்கள் அனைவரும் என்றும் மறவாதிருந்து நினைவுகூர வேண்டியவர்களாக இருக்க வேண்டுமென்பதால் அறியத்தருகின்றேன். இந்த உசன் சமாதி மடத்தில் உசன் கிராம மக்களிலும் பார்க்க கூடுதலாக வெளியூர்களிலுள்ள அறிவாளிகள், சாமிமார்கள் வந்து பலவித செயல்களுடன் தங்கி ஆறுதலடைந்து போவது குறிப்பிடத்தக்கது.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

# குருவருளால் உயிர்நாடியை எழுப்பிச் சிவப்பேறு கண்ட

# பெருமிழலைக் குறும்ப நாயனார்





**சிவத்திருமதி.
நவிசா சுஜிந்தன்
ஆய்வு மாணவர்,
முதுதத்துவமாணி**

சிவனடியார் வழிபாட்டின் மூலம் இறைவனை அடையலாம் என்பதை தனது வாழ்வியலூடாக வாழ்ந்து காட்டிய பெருமிழலைக் குறும்ப நாயனாரை சுந்தரர் திருத்தொண்ட தொகையில் **“பெருமிழலை குறும்பற்கும் அடியேன்”** என்று போற்றுகிறார். இவர் சோழநாட்டின் பெருமிழலை என்ற தலத்தில் குறும்பர் இனத்தில் தோன்றியவர். இவர் மிழலை நாட்டை, பெருமிழலை என்பதைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட ஒரு சிற்றரசர்.

இவர் சிறுவயது முதலே சிவபெருமான் மீது பத்தியும் அன்பும் கொண்டிருந்தார். சிவபெருமான் திருவடிகளை நெஞ்சத்தாமைரையில் இருத்தி வழிபாடு செய்பவர். இறைவனது **“நமசிவாய”** என்னும் திருவைந்தெழுத்தை இடைவிடாது ஓதியும் இறைவனை உள்ளத்தில் எப்போதும் நினைத்த வண்ணமுமாகத் திகழ்ந்த தீராத பத்தியை உடையவர்.

சிறந்த சிவபத்தராக விளங்கிய இவர், சிவனிடத்தும் அவர் தம் அடியவர் இடத்தும் பேரன்பு கொண்டிருந்தார். அடியார்களுக்கு செய்யும் தொண்டு ஆண்டவனுக்கு செய்யும் தொண்டாகும் என்ற கருத்திற்கு ஏற்ப, சிவனடியார்களைக் கண்டதும் பணிந்து வணங்கி, அவர்தம் முகக்குறிப்பு அறிந்து அவர்களுக்கு வேண்டிய தொண்டுகளை அவர்கள் கூறுவதற்கு முன்பே குறிப்பறிந்து தொண்டாற்றுவார். அவர்களை தம் இல்லத்திற்கு வரவேற்று திருவமுது படைப்பார். வேண்டிய பொருட்களை வழங்குவதோடு அவர்களின் ஏவல்களையும் இன்முகத்தோடு செய்வார். இதனால் சிவனடியார்கள் பலர் அவரை நாடி வந்தனர். இறைவனின் திருவருளே இறவாத பெருஞ்செல்வம் என்பதை மனதில் கொண்டு, இவர் சிவனடியார்களுக்கான திருப்பணிகளை விருப்புடன் செய்பவர், இவரின் திருத்தொண்டைக் கண்டு மகிழ்ந்த சிவனடியார்கள் பலர் அவரை நாடி வந்தனர். இவரின் திருத்தொண்டுச் சிறப்பை திருத்தொண்டர் புராணத்தில்,

**தொண்டர் பலரும் வந்து ஈண்டி உண்ணத் தொலையா அமுது ஊட்டிக்**
**கொண்டு செல்ல வரு நிதியம் முகந்து கொடுத்துக் குறைந்து அடைவார்**
**வண்டு மருவும் குழல் உமையாள் கேள்வன் செய்ய தாள் என்னும்**
**புண்ட ரீகம் அக மலரில் வைத்துப் போற்றும் பொற்பினார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:29:03)**

என மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார்.

சிவனடியார்களிடம் பேரன்பு கொண்ட பெருமிழலைக் குறும்ப நாயனாருக்கு, திருத்தொண்டத்தொகை பாடிய இறைவனின் திருத்தொண்டரான சுந்தர மூர்த்தி நாயனாரைப் பற்றி தெரிய வந்த போது, சுந்தரரின் இறைபக்தி அவரை ஆட்கொண்டது. அன்று முதல் சுந்தரரை குருவாக ஏற்று சிவனை வழிபட்டு அவரின் திருநாமத்தினைப் போற்றி வந்ததோடு அல்லாமல், சுந்தர மூர்த்தி நாயனாரின் புகழைப் பேசியும், அவரை நினைந்தும் இன்புற்றார். அவருடைய திருவடிகளைக் கையால் தொழுது, வாயால் வாழ்த்தி, மனதால் நினைப்பதையே சிவபெருமான் திருவடிகளை அடைவதற்குரிய நெறியாகும் என்று துதித்து வழிபட்டார். அதனால் அவர் அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் எண் பெருஞ் சித்திகளையும் (அட்ட மா சித்திகள்)அடைந்தார் என்பதை,

**நாளும் நம்பி ஆரூரர் நாமம் நவின்ற நலத்தாலே**
**ஆளும் படியால் அணி மாதி சித்தியான அணைந்த அதன்பின்**
**மூளும் காதலுடன் பெருக முதல்வர் நாமத்து அஞ்சு எழுத்தும்**
**கேளும் பொருளும் உணர்வும் ஆம் பரிசு வாய்ப்பக் கெழுமினார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:29:06)**

எனும் பாடலடியினூடாக எடுத்தியம்பியுள்ளார்.

தம்முடைய தியானத்தின் வலிமையால் சுந்தர மூர்த்தி நாயனாரை உணர்ந்து தினமும் வழிபட்டு வந்தார். குருவருளோடு கூடவே திருவருளும் அவருக்குத் துணை நின்றது. சுந்தரமூர்த்தி நாயனாரைச் சித்தத்தால் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டார். சுந்தர மூர்த்தி நாயனாரின் அன்றாட நிகழ்ச்சிகளை ஒருவாறு தன்னுடைய உள்ளுணர்வால் அறிந்து கொண்டு இன்புற்றார். நாளாக நாளாக அவர் என்னென்ன செய்கிறார் என்று பெருமிழலைக் குறும்ப நாயனார் உணர்ந்து கொண்டு வந்தார். சுந்தர மூர்த்தி நாயனாரைப் பற்றி எண்ணியபடியே தியானம் செய்தார். இறையருள் பெற்ற சுந்தரரை பத்தி செய்தலே சிறந்த வழி என்பதில் உறுதியாக வாழ்ந்தார்.

இத்தகைய நியமங்களையுடையாராய்ப் பெருமிழலைக் குறும்பர் வாழ்ந்துவரும் நாளில், சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக் களத்திற் சென்று திருப்பதிகம் பாட அவருக்குச் சிவபெருமான் அருளால் வடகயிலை அடையும் பேறு மறுநாள் கிடைக்க இருப்பதனைத் தம்முடைய ஊரில் இருந்து கொண்டே தனது ஞான சித்தியால் உணர்ந்தார். சுந்தரர் இல்லாமல் தான் மட்டும் புவியில் வாழ அவர் விரும்பவில்லை. சுந்தரமூர்த்தி நாயனார் மீது தாம் கொண்டுள்ள பத்தியின் வன்மையால் தமது சித்தயோக முயற்சியினால் சுந்தரர் கயிலையை அடையும் முன்னர், நானும் எனது யோக சத்தியால் கயிலையை அடைவேன் என்று மனதில் உறுதி பூண்டார் என்ற குருபத்திச் சிறப்பை,

**மண்ணில் திகழும் திரு நாவலூரில் வந்த வன் தொண்டர்**
**நண்ணற்கு அரிய திருக் கயிலை நாளை எய்த நான் பிரிந்து**
**கண்ணிற்கு அரிய மணி கழிய வாழ்வோர் போல வாழேன் என்று**
**எண்ணிச் சிவன் தாள் இன்றே சென்று அடைவன் யோகத்தால் என்பார்**
**- (திருத்தொண்டர் புராணம் 12:29:09)**

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது. எம்பெருமானை நினைந்து சிவயோகத்தில் ஆழ்ந்தார். இடைபிங்கலை நடுநாடியாம் சுழிமுனையிலிருந்து உயிர்நாடியை எழுப்பி, அடியாதாரம், நாபித் தலம், நெஞ்சத்தாம்பலம், மிடற்றுத் தலம், புருவ நடு ஆகிய அகவுறுப்பு நிலைகளைக் கடந்தார். உச்சந்தலையில் நிலைத்து, மண்டையோட்டைத் திறந்து தம் உடலை நீத்தார். திருக்கயிலாயத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார் வந்தடைவதற்கு முன்பே சென்று சிவபெருமானின் திருவடி நீழலில் கலந்தார். இது, அவரது திண்ணிய மன உறுதிக்கும் குருவடிப் பத்திக்கும் சான்றாக விளங்குகின்றது.

**நாலு கரணங்களும் ஒன்றாய் நல்ல அறிவு மேற் கொண்டு**
**காலும் பிரம நாடி வழிக் கருத்துச் செலுத்தக் கபால நடு**
**ஏலவே முன் பயின்ற நெறி எடுத்த மறை மூலம் திறப்ப**
**மூல முதல்வர் திருப் பாதம் அணைவார் கயிலை முன் அணைந்தார்.**
**- (திருத்தொண்டர் புராணம் 12:29:10)**

இப் பாடல் சுட்டப்படுகின்றது. சுந்தர மூர்த்தி நாயனாரிடம் இருந்த அளவு கடந்த பத்தியினால் சுந்தரரை குருவாக ஏற்று, மனம், மொழி, மெய்யால் வழிபட்டு சிவ பத்தியிலும், சிவனடியார் பத்தியிலும் சிறந்து விளங்கி, அவரது திருவடிகளைக் கையால் தொழுது வாயால் வாழ்த்தி மனதால் நினைத்து வழிபட்டு ஆடித் திங்கள் சித்திரை நட்சத்திரத்தில் சிவப்பேற்றினை அடைந்து, குருநாதருக்காக உயிர் துறந்த ஓர் அரிய பத்தர் பெருமிழலைக் குறும்ப நாயனார்.

**திருச்சிற்றம்பலம்**




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Renewal at the Meenaatchi Amman Temple

On the morning of 17 September, priests stood atop the gopurams and vimanams of the Sri Meenaatchi Sundareswarar Temple in Madurai, pouring sanctified water over the kalasams as hymns filled the air. It was the temple's first Kudamuzhukku since April 2009. For the thousands who packed the streets around it, and for Tamils watching from across the world, it was a moment that does not come around often. A generation of children had grown up without ever seeing one.

A Kudamuzhukku is traditionally held about once every twelve years, which meant this one was due around 2021. But in February 2018, a major fire severely damaged the Veeravasantharayar Mandapam. Restoring it meant sourcing, carving and installing 79 black granite pillars, each around 15 feet high, while court proceedings and painstaking heritage work extended the wait further. Seventeen years would eventually pass between ceremonies.

Yet there is something fitting about that long wait. Before the temple could be renewed, part of it first had to be rebuilt.

That is, in many ways, the idea at the heart of the Kudamuzhukku itself. A temple is not simply a monument that stands still. Its sanctity must be renewed. Stone is cleaned, towers are restored and repainted, sacred spaces are reconsecrated, and the community gathers once again around them. In that sense, the ceremony is not only about preserving the past. It is about preparing for the future. It reminds us that what our ancestors built is still alive, and still ours to look after.

Few places carry that weight quite like Madurai. In Tamil tradition, it is remembered as the great city of the Sangams, where poets gathered and where some of the language's most enduring literary traditions took shape. At its centre stands the temple of Meenaatchi, the goddess and queen of Madurai, alongside Sundareswarar. Its towering gopurams, covered in thousands of painted figures, remain among the most recognisable achievements of Tamil art and architecture. For centuries, the temple has been more than a place of worship. It has been part of the city's clock and calendar, shaping the rhythm of its festivals, markets and family life.

What stood out about this Kudamuzhukku was also how much of it was shared. Annadanam was organised for more than 50,000 devotees, with hundreds of volunteers helping prepare and distribute food. No single person could own a day like this. Everyone had a part in it.

For those of us in the diaspora, that sense of shared ownership is worth thinking about. Most of us may never stand beneath those gopurams on the morning of a Kudamuzhukku. But the values the ceremony carries renewal, generosity and the responsibility to pass things on in better shape than we found them- travel remarkably well.

They appear in temple committees in Western Sydney, in Tamil schools on Saturday mornings, in community halls filled for cultural events, and in grandparents teaching songs and prayers to children who mostly speak English.

That, perhaps, is where the meaning of the Kudamuzhukku reaches beyond the walls of the temple.

Stone can be restored every twelve or seventeen years. Culture cannot wait that long. It has to be renewed every day, in our homes, in our language, in our places of worship and in our communities, or it quietly begins to fade.

The Meenaatchi Temple has been renewed once more. The question for the rest of us, wherever we live, is what we are doing to renew the things we inherited.

# Saiva Saint Perumizhalai Kurumba Nayanar - The Yogi



Kurumbar Nayanar is counted the twenty-second of the sixty-three Nayanmars. He belongs to the substantial body of saints whose standing in the Saiva canon does not depend upon hymn composition. As with figures such as Kulachirai Nayanar and Mangayarkkarasiyar, his importance lies in the form his devotion assumed in life rather than in any surviving literary corpus. In Kurumbar's case, the Periya Puranam presents a religious life defined by service to Sivanadiyargal, sustained yogic discipline, devotion to the Ainthu Ezhuthukal and a particularly intense attachment to Suntharamurti Nayanar.

His inclusion among the saintly sixty-three is important because the Nayanmar tradition does not confine sainthood to poets, theologians or temple founders. It accommodates several distinct forms of religious attainment, including forms of devotion expressed through service, political loyalty, renunciation, hospitality and contemplative excellence. Kurumbar occupies a distinctive place within that range because his spiritual life is presented as deeply interior, yet never detached from service to other devotees.

## Background

Kurumbar belonged to the land of Perumizhalai and is described as the ruler of a small province. The Periya Puranam gives little attention to his political position in itself, since his identity within the narrative is established primarily through the manner in which he received and served Sivanadiyargal.

He extended hospitality to Sivayogis with humility, serving them with food, gifts and the respect due, to those who had dedicated themselves to Sivaperuman. Within the Saiva tradition, such hospitality is not treated simply as generosity in a social sense. Service to the devotee

is itself regarded as service to Sivaperuman, so that the reception of Sivanadiyargal becomes part of religious observance rather than an incidental virtue attached to it.

This idea is central to a number of Nayanmar lives and tales. Kurumbar's hospitality therefore belongs within the same devotional framework as his meditation and yogic practice, and the Periya Puranam treats these outward and inward disciplines as parts of the same religious/ spiritual life.

## His yogic practice

Kurumbar was devoted to the Ainthu Ezhuthu and practised yoga to a degree that the Periya Puranam credits him with attainment of the eight Siddhis (Atta Sitthi). Yet these powers are not presented as the goal towards which his spiritual discipline was directed. Their importance lies instead in the fact that he attained them without allowing them to displace devotion as the solemn governing purpose of his practice.

His life therefore offers a particular model of Saiva yoga, one in which discipline and attainment are accepted but are not permitted to become objects of spiritual ambition in themselves.

## His devotion to Suntharar

Suntharar occupied an unusual and important place in Kurumbar's spiritual life. Kurumbar meditated upon him with the reverence accorded to a guru, keeping his mind fixed upon Suntharar's feet and repeatedly invoking his name.

This relationship reflects a wider Saiva understanding in which devotion to Sivaperuman may be expressed through devotion to those who "belong" to him. His life is consequently one of the clearer instances in the Nayanmar tradition in which devotion operates through the mundane.

## His Significance in Suntharar's life

The central episode in Kurumbar's story occurs shortly before Suntharar's departure from earthly life. Through yogic knowledge, Kurumbar became aware that Sivaperuman had granted Suntharar eternal life and that Sundarar would shortly depart for Kailasam for good.

Unable to reconcile himself to remaining in the world after the departure of the devotee whom he regarded as his guru, Kurumbar resolved to reach Sivaperuman through yoga before Suntharar himself arrived in Kailasam. The Periya Puranam describes this final act in the language of "yogic withdrawal, with mind, intelligence, ego and consciousness drawn inward, thought raised beyond ordinary mental activity, and life released through the crown (believed to be the typical way through which one's soul leaves the martial coil".

The episode gives final expression to the relationship between yoga and devotion that surrounds his life. The spiritual powers attributed to him are therefore means through which his attachment to Sundarar and his devotion to Sivaperuman are brought to completion.

## Rememberance

Perumizhalai Kurumbar is remembered through service. He composed no body of hymns, led no celebrated theological revolution and is not principally associated with temple patronage or public religious authority. This is rare and special.

His account also gives particular force to the Saiva understanding of adiyar sevai, in which hospitality and service to the devotees of Sivaperuman are treated as forms of worship in their own right. The saint is commemorated year on year on the Chithirai Natchathiram of the Tamil month Adi by families, institutions and devotees.

# தென்னாட்டு நிகழ்வுகள்



கட்டன் பன்மூர் அன்பே சிவம் அறநெறி மாணவர்களின் வருகை (26-06-2026)



தென்னாடு உழவாரப்படையின் மூன்றாவது திங்கள் உழவாரப் பணி (06-09-2026)



# தென்னாட்டு நிகழ்வுகள்



ஆவணித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (27-08-2026)

தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் எழுபத்து நான்காவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி நிறங்கள்" (மதி கலர்ஸ்) பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2300 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 09 ஆம் நாள் நிறைமதி அன்று (26-09-2026 சனிக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org